**22.10.2024**

**O.S.No. 32/2017**

**வா.சா.1 : அம்பிகா**

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் பாக சொத்து எனக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து என் தாத்தா பழனிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. என் தாத்தா பழனிமுத்து கவுண்டருக்கு 4 பிள்ளைகள். அவர்கள் ராமகவுண்டர், முனியம்மாள், மாரியம்மாள் மற்றும் என் தாயார் மணி ஆகியோர்கள் வாரிசுகள்.

2) சொத்து குறித்து யாருக்கும் எவ்வித ஆவணமும் எழுதிவைக்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 15 நாட்களுக்கு முன்பாக பழனிமுத்து ககவுண்டர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனவே அவர் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டதால் அவரின் 4 வாரிசுகளுக்கும் பாக பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். ராமகவுண்டர் என்பவர் 08.05.2005ல் லட்சுமி, சின்னம்மாள், முனியம்மாள், மீனாட்சி, பரமேஸ்வரி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். அதே போல் முனியம்மாளும் 2011ல் நாராயணன், அங்கமுத்து, ராமர், செல்லம்மாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான்.

3) அதே போல் மாரியம்மாளும் 24.12.2016ல் தங்கவேல், சடையம்மாள், செல்லம், முருகன் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். என்

தாயார் மணி எனக்கு 3 வயதாக இருக்கும் போதே இறந்துவிட்டார். என் அப்பா அம்பாயம் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் அம்மாவிற்கு நான் ஒரே மகள் என்றால் சரிதான்.

4) தாவா சொத்து பொறுத்து ராமகவுண்டரின் வாரிசுகள் சேர்ந்து 21.09.2010 ஒரு பாக பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றும் என் வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் சாட்சியாக என்னுடைய கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். என்னை ஏமாற்றி எழுதி வாங்கிகொண்டார்கள். அன்று பணம் ரூ- 50 ஆயிரம் வாங்கிக்கொண்டு தான் கையெழுத்து போட்டேன் என்றால் தருகிறேன் என்று சொன்னார்கள் ஆனால் தரவில்லை. அவ்வாறு பணம் ரூ- 50 ஆயிரம் வாங்கிக்கொண்டு தான் கையெழுத்து போட்டேன் என்றால் தருகிறேன் என்ற விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை.

5) வா.சா.ஆ.1ன் பாக பத்திரம் படி பரமேஸ்வரி பாக சொத்தை தவிர மற்ற பாக சொத்துகள் அனைத்தும் 14, 33ம் பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் அவ்வாறு விற்றுவிட்டதாக தான் சொன்னார்கள். வா.சா.ஆ-1 ல் பரமேஸ்வரி பாக சொத்தை தவிர மற்ற பாக சொத்துகள் அனைத்தும் 14, 33ம் பிரதிவாதிகளுக்கு கிரையம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான்.

6) மாரியம்மாள் என்பவர் அ.எண். 100/2010 என்ற வழக்கை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். அதில் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டு இறுதி நிலை தீர்ப்பாணைக்காக இ.எண். 181/2013 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த இறுதி நிலை தீர்ப்பாணையில் என்னையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்று இ.ம.எண். 1198/2016 இடைகால மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7) அதன்படி அந்த மனுவில் தரப்பினராக நான் 12ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். மாரியம்மாள் தாக்கல் செய்துள்ள இறுதி நிலை தீர்ப்பாணையில் நான் தரப்பினராக சேர்க்கப்பட்டதால் மேற்படி அ.எண். 100/2010ன் தீர்ப்பாணையை ரத்து செய்ய கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. அதே போல் மாரியம்மாள் போட்ட மனு நிலுவையில் இருந்த போது தான் ராமகவுண்டரின் வாரிசுகளிடம் இருந்து 14, 33ம் பிரதிவாதிகள் சொத்துக்களை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

8) ராமகவுண்டரின் வாரிசுகளுக்கு பழனிமுத்துகவுண்டரின் சொத்துக்களில் 1/4 பாத்தியம் மட்டுமே விற்பனை செய்ய உரிமை உள்ளது என்றால் சரிதான். எனவே 1/4 பாகத்தை தவிர அதிக பாகத்தை விற்பனை செய்ய ராமகவுண்டரின் வாரிசுகளுக்கு உரிமை ஏதும் இல்லை என்று சொன்னால் சரிதான். அதனால் தான் நான் வா.சா.ஆ.1 முதல் 23 வரையான ஆவணங்களை ரத்து செய்யக்கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

9) எனவே தாவாவில் நான் கேட்டுள்ள பரிகாரம் ஆனது இந்து வாரிசு உரிமை சட்டத்தின் 2005ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திருத்த சட்டத்தின் அடிப்படையில் பழனிமுத்துகவுண்டரின் 4 வாரிசுகளுக்கும் அவருடைய சொத்துக்களில் 1/4 பாக உரிமை உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் தாவாவில் பழைய சட்டத்தின் படி 3/24 பாக உரிமை கோரியுள்ளேன் என்றும் எனவே நான் தவறான பாக விகித உரிமை கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

10) 1 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையிலே 2005 திருத்த சட்டத்தின் படி 1/4 பாக உரிமை தான் உள்ளது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் அது பற்றி மறுத்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.எண். 100/2010ன் பாக பிரிவினை வழக்கு நடவடிக்கையில் நான் தரப்பினராக உள்ள நிலையில் அதை ரத்து செய்ய இவ்வழக்கில் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

11) எனவே தாவாவில் கோரியுள்ளபடி வா.சா.ஆ.1 முதல் 23 வரையான ஆவணங்களில் பிரதிவாதிகளுக்கு ஆட்சேபணையும் இல்லை. எனவே நான் தாவாவில் கோரியுள்ள பாக விகிதம் தவறானது என்பதால் அது குறித்து திருத்தம் செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

12) அ.எண். 100/2010 ல் என்னை தரப்பினராக சேர்த்து இருந்தால் இந்த வழக்கு போடவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். தற்போது உள்ள சட்டப்படி எனக்கு உரிய பாக விகிதம் வழங்கவேண்டும் என்றால் சரிதான்.

**மறு குறுக்கு விசாரணை**

13) மேற்படி 100/2010 இறுதி நிலை தீர்ப்பாணையில் நான் தரப்பினராக உள்ள நிலையில் அது குறித்து இந்த வழக்கில் பரிகாரம் கோர முடியாது என்றால் சரிதான்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**